இருப்பாய் தமிழாய் நெருப்பாய் 2
இருந்தது போதும் இதுவரை செருப்பாய்
இருப்பாய் தமிழாய் நெருப்பாய் 2

குட்டக் குட்ட நீ குனிந்தாய்
உலகத்தில் குட்டிக்கொண்டே தான் இருப்பார்
முரசு கொட்டி எழடா
உன் பகைவன் பிடரியில் குதிகால் ஓடி பறப்பான்

இருப்பாய் தமிழாய் நெருப்பாய் 2

கைவிலங்கு நீ சுமந்தாய்
இதற்கோடா கருவில் உன்னை தாய் சுமந்தாள்
ஆனப்போர் செய்ய களம்வாட கொடுமை தூள்படும்
சிறுத்தை உன் கண்கள் சிவந்தால்

இருப்பாய் தமிழாய் நெருப்பாய் 2

வெல்லுமோடா உயிர் உனக்கு
புவிகாண வீறு கொண்டு போரிடடா
தமிழர் உள்ளம் மகிழ
நீ களத்தில் எடடா
உயிரையும் தூக்கி கொடடா

இருப்பாய் தமிழாய் நெருப்பாய் 2

வஞ்சினம் முழங்கி எழடா
மானத்தின் வல்லமை உன் பகை உடைக்கும்
அட நெஞ்சில் தமிழ்வீரம் பொங்க நில்லடா
நிமிர்ந்த வரலாறு கிடைக்கும்

இருப்பாய் தமிழாய் நெருப்பாய் 2
இருந்தது போதும் இதுவரை செருப்பாய்
இருப்பாய் தமிழாய் நெருப்பாய் 2

இருப்பாய் தமிழாய் நெருப்பாய் 2